

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035.

தொலைபேசி எண்.044–2951 5590

ஆணை நாள். 02.11.2026

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் : SA- 15989/A/2024

திரு.கோவை எஸ்.எஸ்.மனோ -- **மனுதாரர்**

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக
உதவியாளர்,
முதன்மைக்கல்வி அலுவலகம்,
திருநெல்வேலி மாவட்டம் – 627 009. .. **பொது அதிகார அமைப்பு**

ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 02.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.கோவை எஸ்.எஸ்.மனோ அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)–ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.தே.சதீஷ் கிங்ஸ்லி, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்), திருநெல்வெலி மாவட்டம் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 8(2)–ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆணையம் இதனை பதிவு செய்கின்றது. அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக திருமதி நா.லீலா, பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர், மாவட்டக் கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்), திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 20.09.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திருநெல்வேலி மாவட்டம்,

மூலக்கரைப்பட்டி, ரீச் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி துவங்கப்பட்ட நாள், அரசால் வழங்கப்பட்ட அங்கீகார சான்றிதழின் நகல் மற்றும் எத்தனை மாணவ மாணவிகள் பயின்று வருகிறார்கள் சார்ந்து தகவல்களாக வழங்கக் கோரி 15 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர் 26.10.2024 நாளிட்ட பிரிவு 19(1)–ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர், 09.12.2024 நாளிட்ட பிரிவு 19(3)–ன் கீழ் இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார்.. அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 02.11.2026 முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 17.12.2024 மற்றும் 13.02.2025 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்கள் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் உறுதி செய்து, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

(ஒம்/– (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண் SA- 15989/A/2024</u>

பொதுத் தகவல் அலுவலர்/
முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக
உதவியாளர்,
முதன்மைக்கல்வி அலுவலகம்,
திருநெல்வேலி மாவட்டம் – 627 009.

<u>மனுதாரர்:</u>
திரு.கோவை எஸ்.எஸ்.மனோ,
வி–2, ஆர்.சி.என்கிளேவ்,
36, செல்வம் நகர்,
பொன்னியம்மன் மேடு,
சென்னை மாவட்டம் – 600 110.

Copy to File
Je/PA 02.11.2026